# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 29/மா/2026
நாள் 24.04.2026

R. சிவக்குமார்,
காரமடை, கோயம்புத்தூர் மாவட்டம். --- முறையீட்டு மனுதாரர்

(1) உதவி ஆணையாளர்,
வடக்கு மண்டலம்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

(2) M/s Spero Hospital Pvt. Ltd.,
கோயம்புத்தூர்–641 018. --- எதிர் மனுதாரர்கள்

கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை, திம்மம்பாளையம், K.S.P கார்டன், கதவு எண் 9/157 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. D. சிவக்குமார் என்பவரின் 03.11.2025 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 06.11.2025 அன்று பெறப்பட்டு 29/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை, திம்மம்பாளையம், K.S.P கார்டன், கதவு எண் 9/157 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. D. சிவக்குமார் என்பவர் தனது 03.11.2025 மற்றும் 21.01.2026 நாளிட்ட முறையீட்டு மனுக்களில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

> "25.08.2025 அன்று மாவட்ட ஆட்சித் தலைவரின் மக்கள் குறை தீர்க்கும் முகாமில் மனு எண் / நாள் 291 / 25.08.2025 கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட வெள்ள கிணறு to துடியலூர் மெயின் ரோடு பகுதியில் டெக்ஸ்மோ தொழிற்சாலை அருகிலேயே விதிகளை மீறி மருத்துவமனை கட்டிடம் கட்ட விதிகளை மீறி கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அந்த அனுமதியை ரத்து செய்து நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொண்டேன். AC வடக்கு அவர்கள் இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை ஆகவே தாங்கள் உரிய விசாரணை நடத்தி தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்."

(2) மேற்கண்ட புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள மருத்துவமனையின் பெயர் மற்றும் முகவரி ஆகிய விவரங்களை, இம்முறைமன்ற நடுவத்தின் விசாரணை மற்றும் மேல்நடவடிக்கை தொடர்பாக, அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவ 13.01.2026 நாளிட்ட கடிதத்தில் மனுதாரர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

(3) மனுதாரர் தனது 21.01.2026 நாளிட்ட கடிதத்தில் M/S SPERO HOSPITAL PVT. LTD., மேட்டுப்பாளையம் மெயின் ரோடு வெள்ளக் கிணறு பிரிவு அருகில் டெக்ஸ்மோ தொழிற்சாலை ஒட்டி உள்ளது. மேற்படி முழு முகவரி தேவை என்றால் எனது புகார் மனுவில் கட்டிட அனுமதியின் நகல் இணைக்கப்பட்டுள்ளது. அதை வைத்து தாங்கள் மாநகராட்சியில் விவரம் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு: கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 12.02.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டல உதவி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் உதவி ஆணையாளர் தனது கடிதம் ந.க. எண் 1704/2026/எச்.1 (வ) நாள் 26.02.2026–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்:

''கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலத்திற்குட்பட்ட துடியலூர் கிராமம் – க.ச.எண்.18/2A3D,2B, 3, 4–ல் அனுமதிக்கு மாறுதலாகவும் கூடுதலாகவும் கட்டப்பட்டுள்ள மருத்துவமனை கட்டிடத்தினை, மாநகராட்சி மூலம் இடம் நேராய்வு செய்யப்பட்டதில் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மருத்துவமனை கட்டிடமானது கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் (மு.கூ.பொ.) அவர்களின் ந.க எண் 2435/2022, உதிகு.திஅ. எண் 277 ''அ'' முதல் ''உ'' வரை/2022–ன்படி திட்ட அனுமதி வழங்கப்பட்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் ந.க. எண் 4024/2022/எம்எச்4 நாள் 20.09.2022 கட்டிட அனுமதி எண் 728, 2022, MH3/N–ன்படி நாள் 20.09.2022 அன்று இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழும உறுப்பினர் செயலர் (மு.கூ.பொ) அவர்களால் கட்டிடம் நிறைவு சான்றிதழ் 19.11.2025 அன்று வழங்கப்பட்டுள்ளது. மேற்காண் கட்டிடத்தினை நேராய்வு செய்ததில் மேற்காண் கட்டிடம் ஆனது கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழுமம் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலகத்தின் கட்டிட அனுமதியின்படியே, கட்டிட அளவீடு உள்ளது. அதன் விபரம் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | கட்டிட விவரம் | அனுமதி வழங்கப்பட்ட கட்டிடம் விவரம் (ச.மீ) | நிலையில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் விவரம் (ச.மீ) |
|---|---|---|---|
| 01 | Basement 2 | 3984.79 | 3984.79 |
| 02 | Basement 1 | 3984.79 | 3984.79 |
| 03 | தரைத்தளம் | 2707.22 | 2707.22 |
| 04 | முதல் தளம் | 2707.22 | 2707.22 |
| 05 | இரண்டாம் தளம் | 2707.22 | 2707.22 |
| 06 | மூன்றாம் தளம் | 2724.41 | 2724.41 |
| 07 | டெரஸ் தளம் | 160.33 | 160.33 |
| | மொத்தம் | 18975.98 | 18975.98 |

மேலும் எந்தவொரு நிரந்தர கட்டுமானமும் மற்றும் கூடுதல் கட்டுமானமும் கட்டப்படவில்லை. டெரஸ் தளத்தில் தற்காலிக GI Sheet போடப்பட்டுள்ளது. அனுமதிக்கு மாறுதலான கட்டுமானம் எதுவும் இல்லை என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.''

4. இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 09.04.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.03.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. இந்நிலையில், மனுதாரர் தனது 04.04.2026 நாளிட்ட கடிதத்தில் சொந்த வேலையின் காரணமாக தன்னால் 09.04.2026 அன்று நேரில் விசாரணைக்கு ஆஜராக இயலாததால் தனது புகாரினை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"1) 25.8.25 எனது புகார் மனு மீது 7 மாதங்கள் ஆகியும் உதவி ஆணையர் வடக்கு மண்டலம் கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்கள் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேற்படி கட்டிடம் அனுமதி அளித்தது சரியா இல்லை விதிமீறல் உள்ளதா இதனால் வரை பதில் தரவில்லை. இவர் தன் கடமையை செய்ய தவறுகிறார். கட்டிட உரிமையாளரிடம் சுயலாபம் அடைந்து விட்டாரா என ஐயம் எழுகிறது.

2) விதி மீறிய கட்டிடங்கள் மீது நடவடிக்கை எடுக்காததால் மாநகராட்சி பகுதிகளில் விதிமீறி கட்டிடங்கள் அதிக அளவில் கட்டப்பட்டு வருகின்றன.

3) வரும் காலங்களில் விதி மீறிய கட்டிடங்கள் கட்டாமல் இருக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க தமிழக அரசுக்கு பரிந்துரைக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்."

6. முதல் எதிர்மனுதாரரான கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டல உதவி ஆணையர் சார்பாக உதவி செயற்பொறியாளர் 09.04.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:—

"கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலத்திற்குட்பட்ட துடியலூர் கிராமம் க.ச.எண் 18/2A3D, 2B, 3, 4—ல் அமைந்துள்ள மருத்துவமனை கட்டிடம் நேராய்வு செய்யப்பட்டதில் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மருத்துவமனை கட்டிடமானது கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் ந.க எண் 2435/2022ல் திட்ட அனுமதியும், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரின் 20.09.2022 நாளிட்ட கட்டிட அனுமதியும், 20.09.2022 அன்று இறுதி ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழும உறுப்பினர் அவர்களால் 19.11.2025 அன்று கட்டிட நிறைவு சான்றிதழும் அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட கட்டிடம் நேராய்வு செய்யப்பட்டதில் கட்டிட அனுமதியின்படியும், அளவீடும் உள்ளது என்று கண்டறியப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | கட்டிட விவரம் | அனுமதி வழங்கப்பட்ட கட்டிடம் விவரம் (ச.மீ) | நிலையில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் விவரம் (ச.மீ) |
|---|---|---|---|
| 01 | Basement 2 | 3984.79 | 3984.79 |
| 02 | Basement 1 | 3984.79 | 3984.79 |
| 03 | தரைத்தளம் | 2707.22 | 2707.22 |
| 04 | முதல் தளம் | 2707.22 | 2707.22 |
| 05 | இரண்டாம் தளம் | 2707.22 | 2707.22 |
| 06 | மூன்றாம் தளம் | 2724.41 | 2724.41 |
| 07 | டெரஸ் தளம் | 160.33 | 160.33 |
| | மொத்தம் | 18975.98 | 18975.98 |

மேலும் எந்தவொரு நிரந்தர கட்டுமானமும் மற்றும் கூடுதல் கட்டுமானமும் கட்டப்படவில்லை. அனுமதிக்கு மாறுதலான கட்டுமானம் எதுவும் இல்லை என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்."

7. இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் கோயம்புத்தூர்—துடியலூர்—இல் இயங்கும் M/s Spero Hospital Pvt. Ltd.,—ன் நிர்வாக அதிகாரி 09.04.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி

அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"கோயம்புத்தூர் மாவட்டம் துடியலூர் வில்லேஸ் S.F.No.18/2A 3D, 18/2B, 18/3 & 18/4–ல் 0.27.74 ஹெக்டர் நிலம் 2015 வருடம் கிரையம் செய்யப்பட்டு அங்கு M/s SPERO Hospital Pvt.Ltd என்ற மருத்துவமனை 2025ல் கட்டி முடிக்கப்பட்டது. இம்மருத்துவமனை சுற்றியுள்ள ஏழை மக்களின் நலனில் அக்கறை கொண்டு செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனைக்கு கட்டிட அனுமதி 20.09.2022 அன்று பெறப்பட்டுள்ளது. மேலும் 19.11.2025 அன்று நிறைவு சான்றிதழும் பெறப்பட்டுள்ளது.

எங்கள் மருத்துவமனை கட்டிடம் திட்ட அனுமதிபடியும் கட்டிட அனுமதிபடியும் எந்தவித விதி மீறலும் இல்லாமல் கட்டப்பட்டுள்ளது என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் மருத்துவமனைக்கு பெறப்பட்ட திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கின்றேன்."

8. மனுதாரரின் முறையீட்டு மனு, கடிதம் மற்றும் முதல் எதிர்மனுதாரரான கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டல உதவி ஆணையாளரின் அறிக்கை, உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரரான M/s Spero Hospital Pvt. Ltd.,–ன் சார்பாக அம்மருத்துவமனையின் நிர்வாக அதிகாரியின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட வெள்ள கிணறு to துடியலூர் மெயின் ரோடு பகுதியில் டெக்ஸ்மோ தொழிற்சாலை அருகிலேயே M/S SPERO HOSPITAL PVT. LTD., விதிமீறி மருத்துவமனை கட்டப்பட்டுள்ளதால், கட்டிட அனுமதியை ரத்து செய்யுமாறும், கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் விதி மீறி கட்டப்பட்ட கட்டிடங்கள் மீது நடவடிக்கை எடுக்காததால், விதிமீறி கட்டிடங்கள் அதிக அளவில் கட்டப்பட்டு வருகின்றன என்பதும், வரும் காலங்களில் விதி மீறிய கட்டிடங்கள் கட்டாமல் இருக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு அரசுக்கு பரிந்துரைக்குமாறும் கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் கடிதம் வாயிலாக அறிய முடிகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலத்திற்குட்பட்ட துடியலூர் கிராமம் க.ச.எண்.18/2A3D, 2B, 3,4–ல் அமைந்துள்ள மருத்துவமனை கட்டிடம் நேராய்வு செய்யப்பட்டதில் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மருத்துவமனை கட்டிடமானது கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலரின் திட்ட அனுமதியும், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரின் கட்டிட அனுமதியும், அதற்கான இறுதி ஒப்புதலும் வழங்கப்பட்டும், கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழும உறுப்பினர் அவர்களால் 19.11.2025 அன்று கட்டிட நிறைவு சான்றிதழும் அளிக்கப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட கட்டிடம் நேராய்வு செய்யப்பட்டதில், மேற்கண்ட மருத்துவமனை கட்டிடமானது Basement 2, Basement 1, தரைத்தளம், முதல் தளம், இரண்டாம் தளம், மூன்றாம் மற்றும் டெரஸ் தளம் ஆகியவை கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழுமம் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலகத்தின் கட்டிட அனுமதியின்படியே, கட்டிட அளவீடு உள்ளது என்பதும், எந்தவொரு நிரந்தர கட்டுமானமும், கூடுதல் கட்டுமானமும் கட்டப்படவில்லை என்பதும் மற்றும் அனுமதிக்கு மாறுதலான கட்டுமானமும் எதுவும் இல்லை என்பதும் கோயம்புத்தூர் மாநகராட்சியின் வடக்கு மண்டல உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளர் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

கோயம்புத்தூர் மாவட்டம் துடியலூர் வில்லேஸ் S.F.No.18/2A 3D, 18/2B, 18/3 & 18/4–ல் 0.27.74 ஹெக்டர் நிலம் 2015 வருடம் கிரையம் செய்யப்பட்ட இடத்தில், M/s. Spero

Hospital Pvt.Ltd என்ற மருத்துவமனை கட்டுவதற்கு கட்டிட அனுமதி பெறப்பட்டு, திட்ட அனுமதியின்படியும், கட்டிட அனுமதியின்படியும் எந்தவித விதி மீறலும் இல்லாமல் கட்டப்பட்டு, நிறைவு சான்றிதழும் பெறப்பட்டுள்ளது என்பது இரண்டாம் எதிர்மனுதாரரான M/s.Spero Hospital Pvt.Ltd என்ற மருத்துவமனை சார்பாக ஆஜரான நிர்வாக அதிகாரியின் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்ட கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலத்திற்குட்பட்ட துடியலூர் கிராமம் க.ச.எண் 18/2A3D, 2B, 3, 4–ல் அமைந்துள்ள M/s.Spero Hospital Pvt.Ltd என்ற மருத்துவமனை கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழுமம் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலகத்தின் கட்டிட அனுமதியின்படியும் மற்றும் கட்டிட அளவீடுபடியே கட்டப்பட்டுள்ளது என்று கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டல உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதால், மனுதாரரின் மனு மீது மேல்நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. D. சிவக்குமார்,
கதவு எண் 9/157, K.S.P கார்டன்,
திம்மம்பாளையம், காரமடை,
கோயம்புத்தூர் மாவட்டம்–641 104.

(2) ஆணையர், கோயம்புத்துர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்–641 001.

(3) உதவி ஆணையாளர், வடக்கு மண்டலம்,
கோயம்புத்துர் மாநகராட்சி, காந்திபுரம்,
கோயம்புத்தூர்–641 108.

(4) M/s SPERO HOSPITAL PVT. LTD.,
No.64. Race Course Road,
Coimbatore-641 018.

(5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(6) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

27/4/26
செயலாளர்.
27.4.26